FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348081

1. District : Krishnagiri மாவட்டம் PS: VAC காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 4/AC/2026 முத.அ. எண் Date: 04.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988, as amended Sections பிரிவுகள்: 7(a) & 12
(ii) Act சட்டம்: in 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w 12
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 03.07.2026 நாள் முதல் Date to : before 16.00 hrs நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04.07.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 12.00 hrs நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 50 KM West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Hosur City Municipal Corporation, Krishnagiri District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Sakthivel குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : S.V. Govindasamy. தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age-51 நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian நாட்டினம்
(e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : PA To SDRO தொழில்
(g) Address : முகவரி Special District Revenue Office [L.A], State Highways, Krishnagiri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. R. Ramesh Kumar, Age 55, S/o R. Ram Narayanan, Assistant Commissioner, (Revenue), (Personal) Hosur City Municipal Corporation, Hosur. and 6 others. (Separate Sheet Enclosed herewith)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி தகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04/07/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பெறுப்பு அலுவலரின் ஒப்பம்

04.07.26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2026 at 14.00hrs

Name: பெயர் A.T. Jai Kumar
Rank: நிலை .....No. எண் .....

Deputy Superintendant of Police,
VGAC, Krishnagiri

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.4/AC/2026 u/s 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.7-ன் தொடர்ச்சி.

வ.எண்.	தெரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
1.	திரு.R.ரமேஷ்குமார், வயது 55, த/பெ R.ராம் நாராயணன், உதவி ஆணையர் (வருவாய்) (பணிகள்), ஓசூர் மாநகராட்சி அலுவலகம், ஓசூர்.
2.	திரு.M.சந்தோஷ் குமார், வயது-31, த/பெ முருகன், டேங்க் வாட்ச்மேன், கூடுதல் பொறுப்பு பில் கலெக்டர், ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
3.	திரு.G.கிஷோர், வயது-36, த/பெ கங்காதரன், 6/4, சிவன்படை தெரு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்.
4.	திரு.J.கோபாலகிருஷ்ணன், வயது-32, த/பெ ஜெயபாலன், 6/84, பீர்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
5.	திரு.K.அருண்பிரதாப், வயது-28, த/பெ.குமார், உதவி பொறியாளர், பொறியியல் பிரிவு, ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்
6.	திரு.S.தினேஷ்குமார், வயது-31, த/பெ.செல்வம், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர், (தற்காலிக பணியாளர்) ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்
7.	திரு.S.சிவகுமார், வயது-26, த/பெ.சீனிவாசன், மேற்பார்வையாளர், பாலாஜி டிரேடர்ஸ், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2026 u/s 7(a) and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 04.07.2026-ம் தேதி 12.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், நேர்முக உதவியாளர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகம், மாநில நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி அவர்கள் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், நேர்முக உதவியளார்/ வட்டாட்சியர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அலுவலகம், மாநில நெடுஞ்சாலைதுறை, கிருஷ்ணகிரி. சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலைத்துறை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ) அலுவலகத்தில், நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள் 03.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக என்னை நியமித்திருந்தார். எனக்கு கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்கள், ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை வசூலித்தல், புதிய கட்டிடங்களுக்கு வரி விதித்தல், புதிய நிறுவனங்களுக்கு தொழில் வரி விதித்தல் மற்றும் காலி நிலங்களுக்கு வரிவிதித்தல் மற்றும் வசூல் செய்தல் ஆகிய பணிகளுக்கு முறையாக வரிவசூல் செய்யாமல் இருக்கவும், புதிய கட்டிடங்களுக்கு வரிவிதிப்பில் சலுகைகாட்டவும், புதிய நிறுவனங்களுக்கு குறைவாக தொழில் வரி விதிக்கவும், கடைவாடகை வசூல் செய்யாமல் இருக்கவும் அலுவல் நேரத்தில் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் ஓசூர் மாநகராட்சி அலுவலகம் வந்து, மாலை 16.00 மணிக்கு வருவாய் பிரிவில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஓசூர் மாநகராட்சி ஆணையர் திரு.முகம்மது ஷபீர்

ஆலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இயங்கிவருகிறது. ஆய்வுக்குழுவினர் ஓசூர் மாநகராட்சி அலுவலகத்தில் நுழைந்தபோது ஆணையர் அவர்கள் அலுவலகத்தில் இல்லை. ஆய்வுக்குழுவினரை கண்டதும் வெளியே செல்ல முயன்ற பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த 1) திரு.K.அருண் பிரதாப், உதவி பொறியாளர், ஓசூர் மாநகராட்சி, 2) திரு.S.தினேஷ்குமார், த/பெ செல்வம், 3/741, 8வது குறுக்கு தெரு, பாரதி நகர், மூக்கொண்டப்பள்ளி, ஓசூர், கிருஷ்ணகிரி, 3) திரு.S.பிரேம், த/பெ சுப்பிரமணி, 3/336, ஸ்ரீ கிருஷ்ணா இல்லம், நரசம்மா காலனி, ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் 4) திரு.S.சிவகுமார், த/பெ சீனிவாசன், க.எண் 2/330, டி.கொத்தனூர், அரசகுப்பம், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி ஆகியோர்களை காவல் குழுவினர் தடுத்துநிறுத்தி, அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் செயல்பட்டுவரும் வருவாய் பிரிவிற்க்கு அழைத்துசெல்லப்பட்டது. பின்னர், வருவாய் பிரிவில் அலுவலில் இருந்த திரு.G.ஜெயகுமார் என்பவரிடம் விசாரித்தபோது, தாங்கள் உதவி ஆணையர் (வருவாய்) (பணிகள்) அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருவதாகவும், அவரது அலுவலகம் தரைத்தளத்தில் இயங்கிவருவதாக தெரிவித்தார். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் வருவாய் பிரிவில் இருந்து அலுவலர்கள் யாரும் வெளியே செல்லாதவாறும், வெளியில் இருந்து உள்ளே யாரும் வராதவாரும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் நானும், காவல் துணை கண்காணிப்பாளரும் உதவி ஆணையரை பார்க்க தரைத்தளத்திற்கு சென்றபோது, ஆணையர் அலுவலகத்திற்கு வந்த விவரம் தெரிந்து, ஆணையரை சந்தித்து அறிமுகம் செய்துகொண்டும், வருவாய் பிரிவில் திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்திருக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆணையர் அவர்களிடம் திடீர் ஆய்வு மேற்கொள்ளவிருக்கும் பிரிவிற்கு உதவி ஆணையரை அனுப்பிவைக்க கேட்டுக்கொண்டதன்பேரில், உதவி ஆணையர் (வருவாய்) (பணிகள்) திரு.R.ரமேஷ்குமார் அவர்களை உடன் அனுப்பிவைத்தார். பின்னர் உதவி ஆணையர் திரு.R.ரமேஷ்குமார் அவர்களுடன் வருவாய் பிரிவிற்கு வந்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது வருவாய் பிரிவில் திரு.G.ஜெயக்குமார், திரு.M.சந்தோஷ்குமார், திரு.G.கிஷோர் மற்றும் திரு.J.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பணியில் இருந்தனர். வருவாய் பிரிவிற்குள் நுழைந்ததும், தெற்கு பக்கம் மேற்கு நோக்கி இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க, தனது

பெயர் திரு.M.சந்தோஷ்குமார் என்றும், தான் 05.01.2021-ம் தேதி முதல் ஓசூர் மாநகராட்சியில் டேங்க் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருவதாகவும், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 0005/2025/சி1, நாள்: 27.05.2025-ன்படி கூடுதல் பொறுப்பாக 34 முதல் 39 வார்டுகளுக்கான பில் கலெக்டராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்து, உத்தரவின் நகலை எடுத்து ஆஜர் செய்தார். அதில் உதவி ஆணையாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவரிடம் சோதனை செய்தபோது, பணம் ரூ.3,750/-ஐ எடுத்து ஆஜர் செய்து, தனது செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். மேலும், அவரிடம் விசாரித்தபோது, உதவி வருவாய் ஆய்வாளர் திரு.M.நாராயணன் அவர்கள் வார்டு எண் 44-க்குட்பட்ட 29 கடைகளுக்கு வாடகை வசூல் செய்வதற்கான கேட்பு அறிவிப்பு கொடுத்து அனுப்பியதாகவும், அதில் தான் மத்திகிரி பேருந்துநிலைய வணிக வளாகத்தில் உள்ள 13 கடைகளுக்கு கேட்பு அறிவிப்பு கொடுத்துவிட்டு வந்ததாகவும், அதனுடைய ஒப்புதல் நகல்களை தனது நண்பர் திரு.ரூபன் அவர்களிடம் கொடுத்துவைத்திருப்பதாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் திரு.M.சந்தோஷ்குமார் வைத்திருந்த TN 70 AK 6733 சுசுகி ஆக்சஸ் வாகனத்தை சோதனை செய்ததில் சீட்டிற்கு அடியில் 500 தாள்கள் மடிப்புடன் இருந்தது. அதை எண்ணிப்பார்க்கையில் 500 ரூபாய் தாள்கள் 36 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.18,000/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்க, அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால், மேற்படி பணம் இன்று கேட்பு அறிவிப்பு கொடுக்க சென்ற இடத்தில், கேட்பு அறிவிப்பு சார்வு செய்யாமல் இருக்க கடை உரிமையாளர்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில், அவர் வைத்திருந்த பணம் ரூ.18,000/- மற்றும் அவர் கையில் வைத்திருந்த பணம் ரூ.3,750/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.G.கிஷோர், த/பெ கங்காதரன், 6/4, சிவன்படை தெரு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் என்பவரிடம் விசாரித்தபோது, 27 முதல் 30 வார்டுகளுக்கான வருவாய் ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவருக்கு உதவியாக தான் வருவாய் பிரிவில் கடந்த 1 வருடமாக அலுவலக வேலைகளை செய்துவருவதாகவும், அதற்காக தனக்கு மாதம் ரூ.15,000/- தருவதாகவும் தெரிவித்தார். மேலும், தான் சொத்துவரி விதிப்பு கோரிவரும் விண்ணப்ப படிவத்தில் வருவாய் ஆய்வாளர் கள பணி மேற்கொண்டு அளவீடு செய்துவந்தபின், மேற்படி

படிவத்தில் கட்டிடத்திற்குண்டான அளவீடுகளை எழுதி, ஆணையரின் ஒப்புதலுக்கு அனுப்பும் குறிப்பினை எழுதும் பணிகளையும் செய்துவருவதாக தெரிவித்தார். அவரிடம் அலுவலகத்தில் கையாளும் கோப்புகளின் விவரம் கூறித்து கேட்க, உதவி வருவாய் ஆய்வாளர் திரு.பாலமுகன் அவர்களின் மேசையில் இருந்து File No: 4837/2026/A1, File No: 5242/2026/A1, File No: 4838/2026/A1 மற்றும் File No: 4379/2026/A2 எடுத்துவந்து ஆஜர்செய்து, தான் கைப்பட எழுதிய குறிப்புகளை காண்பித்தார். மேற்படி சொத்துவரி விதிப்புக்கான நான்கு குறிப்புக் கோப்பு படிவங்களின் நகல் எடுத்து உதவி ஆணையர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரிடம் சோதனை செய்தபோது ரூ.1,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்க, எந்தவித பதிலும் சொல்லாததால், வருவாய் ஆய்வாளர் சொன்னதன்பேரில், அவருக்காக கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் மேற்படி பணம் ரூ.1,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் வரிவசூலர் திரு.G.ஜெயகுமார் என்பவரிடம் விசாரித்து அவரது உடமைகளும், இருக்கையும் சோதனையிடப்பட்டது. பின்னர் J.கோபாலகிருஷ்ணன், த/பெ ஜெயபாலன், 6/84, பீர்பள்ளி, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரிடம் விசாரிக்க, 16 முதல் 19 வார்டுகளுக்கான வரிவசூலர் திரு.ஜெயகுமார் அவர்களுக்கு உதவியாக கடைகளுக்கு வாடகை வசூல் மற்றும் வீடுகளுக்கு வரி வசூல் செய்வதற்கான கேட்பு அறிவிப்பு கொடுத்து வரும் பணியினை தான் செய்துவருவதாகவும், அதற்காக தனக்கு மாதம் ரூ.10,000/- தருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்தபோது, ரூ.3,700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்க, எந்தவித பதிலும் சொல்லாததால், வரிவசூலர் சொன்னதன்பேரில், அவருக்காக கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் மேற்படி பணம் ரூ.3,700/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.K.அருண் பிரதாப், என்பவரிடம் விசாரிக்க, தான் பொறியியல் பிரிவில் 08.08.2025-ம் தேதி முதல் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்தபோது வலது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.5,800/-ஐ எடுத்து ஆஜர் செய்து, வீட்டு வாடகை கொடுப்பதற்கும், டூ வீலர் சர்வீஸ் செய்வதற்காகவும் வைத்துள்ளதாக தெரிவித்தார். உதவி

ஆணையரிடம் அலுவலர்களின் கையிருப்பு ரொக்க பணம் பதிவேடு குறித்து கேட்டதற்கு, அவர் தகவல் தெரிவித்தன் பேரில், பொதுப்பிரிவில் இருந்து உதவியாளர் திரு.S.ரமேஷ் அவர்கள் மூலம் மேற்படி பதிவேட்டினை ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் பக்கம் எண் 6 மற்றும் 7-ல் 07.03.2025-ம் தேதிக்கு பின்பு அலுவலர்களின் கையிருப்பு ரொக்கம் சம்மந்தமான எந்த பதிவுகளும் இல்லை. மேற்படி பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கத்தில் நானும், காவல் துணை கண்காணிப்பாளரும் கையொப்பம் செய்து அவற்றின் ஒளிநகல் எடுத்து உதவி ஆணையர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனால் மேற்படி பணம் ரூ.5,800/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.S.தினேஷ்குமார், என்பவரிடம் விசாரிக்க, தற்காலிக பணியாளராக, பொறியியல் பிரிவில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக வேலை செய்து வருவதாகவும், நாள் ஒன்றுக்கு ரூ.734/- வீதம் வேலைசெய்யும் நாட்களுக்கு ஸ்ரீ விஸ்வேஸ்வரய்யா நண்பர்கள் குழு மூலம் ஒவ்வொரு மாதமும் ஊதியம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்தபோது இடதுபக்க பேண்ட் பின் பாக்கெட்டில் இருந்து ரூ.40,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விளக்கம் கேட்டதற்கு, தான் 16 முதல் 45 வரையுள்ள வார்டுகளில் உள்ள வீடுகளில் இருந்து வீட்டு குடிநீர் கட்டணம் வசூல் செய்து, அரசு கணக்கில் செலுத்துவதற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து உதவி ஆணையர் அவர்களிடம் கேட்டதற்கு, வீட்டு குடிநீர் கட்டணம் சம்மந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர்கள் ஆன்லைன் மூலம் அல்லது மாநகராட்சி வரிவசூல் செய்யும் சேவை மையங்களில் செலுத்தவேண்டும் என்று தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.40,500/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின்பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.S.சிவகுமார், என்பவரிடம் விசாரிக்க, ஓசூரில் பாலாஜி டிரேடர்ஸ் என்ற பெயரில் ஒப்பந்த பணிகளை செய்துவரும் திரு.மதியழகன் என்பவரிடம் மேற்பார்வையாளராக வேலை செய்து வருவதாக தெரிவித்தார். மேலும், ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 6 வது வார்டு, நஞ்சப்பா குட்டை பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்தி புதியதாக மின்மோட்டார் கொள்முதல் செய்து பொருத்தும் பணி திரு.மதியழகன் மனைவி திருமதி.C.ரேவதி பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான

பணி ஆணையினை E2 கிளர்க் திருமதி.சாந்தி அவர்களிடம் பெற்று செல்ல வந்திருப்பதாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின்பேரில், திரு.சிவகுமார் அவர்கள் வைத்திருந்த TN 70 AS 2134 இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது சீட்டுக்கு அடியில் 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது. அதை எண்ணிப்பார்கையில் 500 ரூபாய் நோட்டுகள் 80 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.40,000/- இருந்தது. அதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டதற்கு, அலுலக பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ஆழ்துளை கிணற்றினை ஆழப்படுத்தி புதியதாக மின்மோட்டார் கொள்முதல் செய்து பொருத்தும் பணி திரு.மதியழகன் மனைவி திருமதி.C.ரேவதி பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்காக மாநகராட்சி அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக கொண்டுவந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், உதவி ஆணையர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, Roc.No - 00027-W06/ 2025/E2, நாள்: 22.06.2026-ன்படி ஓசூர் மாநகராட்சி ஆணையர் அவர்களால் திருமதி.C.ரேவதி பெயரில் வழங்கப்பட்ட பணி உத்தரவை உதவிப்பொறியாளர் திரு.K.அருண்பிரதாப் மூலம் எடுத்துவரச்செய்து ஆஜர் செய்தார். அதை ஒளி நகல் எடுத்து, உதவி ஆணையர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் ஜீலை மாதத்திற்கான வருவாய் பிரிவு வருகை பதிவேட்டினை ஒளிநகல் எடுத்து உதவி ஆணையர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, ஓசூர் மாநகராட்சி உதவி ஆணையர் திரு.R.ரமேஷ்குமார் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,13,550/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.S.தினேஷ்குமார், திரு.M.சந்தோஷ்குமார், திரு.K.அருண்பிரதாப், திரு.J.கோபாலகிருஷ்ணன், திரு.G.கிஷோர் மற்றும் திரு.S.சிவகுமார் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையையுடன் ஆஜர்படுத்துகிறேன். ஓசூர் மாநகராட்சி வருவாய் பிரிவின் பொறுப்பு அலுவலரான உதவி ஆணையர் திரு.R.ரமேஷ்குமார் மற்றும் சம்மந்தப்பட்ட

நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.G.சக்திவேல்.

மேற்கண்ட புகாரின்படி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, மேற்கு சரக, காவல் கண்காணிப்பாளர், அவர்களின் உத்தரவுபடி கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2026 u/s 7(a) and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி இன்று 04.07.2026-ம் தேதி 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்பமை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

04.07.26.